From

Thiru. N.Vijayakumar,
Tahsildar,
Anaimalai Taluk,
Coimbatore District.

To

The National Green Tribunal,
Southern Zone,
Chennai.

Ref No. 193/2021/A1

Dated: 27.07.2021.

Respected Sir,

Sub : Law and Order – Coimbatore District – Anaimalai Taluk – Periyapothu Group – Marappagoundenpudur Village – Agricultural lands owned by Thiru.Saju Antony, S/o Antony allowed dumping of medical waste and debris illegally transported from Kerala State in his own lands in S.F No.779/B1, 546, 551/B, 552, 554/1, 540/A and 541 – Complaint received from the Public- Seized the Vehicles – FIR filed in the Anaimalai Police Station in FIR No. 202/2021 – Report Submitted – Regarding.

Ref:
1) Oral Instructions received from the Sub Collector, Pollachi on 08.04.2021.
2) Tahsildar, Animalai report to the Collector, Coimbatore in Ref. No.193/2021/A1 Dated: 08.04.2021.
3) FIR No.202/2021 dated 08.04.2021 of Anaimalai Police Station.
4) Newspaper report published in Dinamalar Daily dated 09.04.2021 and Hindu Newspaper Chennai edition, Dated 09.04.2021.
5) Notice from to National Green Tribunal, South Zone, Chennai in O.A No. 100/2021(SZ), Dated: 25.06.2021.

*********

It is submitted that the National Green Tribunal, South Zone, Chennai has registered a Suo Motu Case on the newspaper report published in the Dinamalar Daily dated 09.04.2021 under the caption "கேரள மருத்துவக் கழிவுகள் 3 லாரிகள் சிறைபிடிப்பு" and also another newspaper report published in the Hindu newspaper,

..2

Scanned by CamScanner

Chennai edition, dated 09.04.2021 under the caption "Dumping of garbage foiled near Anaimalai trucks seized" regarding the allegation that the bio –medical as well as municipal solid waste is being disposed of in an unscientific manner in a private land which is being transported from neighbouring Districts namely Thrissur and Palakkad of Kerala State.

It is submitted that the Tribunal has directed the Respondents to submit their independent reports before the Tribunal on or before 29.07.2021 by e-filing. As instructed, I am enclosing my independent report for favour of perusal and necessary Orders in this case.

E-mail: Report along with Supportive Documents.

Yours faithfully,

Tahsildar,
Anaimalai.

27/7/21

Scanned by CamScanner

**Detailed report submitted by the Tahsildar, Anaimalai in respect of Original Application No.100/2021(SZ):**

On the early hours of 08.04.2021, the Sub Collector, Pollachi received a phone call (Secret Message) from the General Public of Marappagoundenpudur Village of Anaimalai Taluk. Immediately the message was passed on to the then Tahsildar, Anaimalai for necessary action. The then Tahsildar, Anaimalai along with the Police reached the spot and made enquiries. The local public stopped three Tipper Lorries bearing nos. KL-43-C-3222, KL-49-D-5807 and KL-08-AZ-497, which carried the bio-medical as well as municipal solid wastes were illegally transported from Kerala and unauthorisedly dumped it in the Patta lands in S.F No. S.F No.779/B1, 546, 551/B, 552, 554/1, 540/A and 541 of Marappagoundenpudur Village near Rettaimadai Pirivu (ரெட்டைமடை பிரிவு) of Anaimalai Taluk, which belongs to one Thiru. Shaji Antony, S/o Antony, who resides in Kerala State.

A verification of Village Records reveals that Tvl. Sunil Antony S/o. Antony, Shaji Antony S/o. Antony, Stanly Antony S/o. Antony, James George S/o. George Mathew, Tom George S/o. George Mathew, Tmt. Jameela D/o. Kanthan Kulathukkara are the Joint Pattadhars, in respect of Patta Nos. 1017, 1019 and 1020. The extent of each survey field is as follows:

| SL No. | Survey No. | Extent (In Hectares) |
|---|---|---|
| 1. | 779/B1 | 1.54.50 |
| 2. | 546 | 1.60.50 |
| 3. | 551/B | 4.65.50 |
| 4. | 552 | 0.37.50 |
| 5. | 554/1 | 1.70.00 |
| 6. | 540/A | 1.06.50 |
| 7. | 541 | 0.62.00 |

...2

Scanned by CamScanner

The entire area is covered by barbed wire fencing. The landowners appointed Thiru. Thangachan and Suresh as Managers to look after their lands.

At the time of the inspection, the bio-medical as well as municipal solid wastes were dumped in the pots measuring Breadth – 8", Length – 40" and Depth – 10" by using a JCB. It is evident that many more tones of bio-medical as well as municipal solid wastes were dumped in many places. Hence, it is evident that this process was going on for a long time. The bio-medical as well as municipal solid wastes from Thrissur and Palakkad of Kerala State were illegally transported and dumped in the patta lands that are noted above unauthorisedly. Therefore, it is evident that the provisions of the Solid Waste Management Rules, 2016 were not adhered and it is a clear violation of Rules.

The 3 Tipper Lorries along with the JCB, that are used for the illegal transportation and unauthorized dumping, were seized and taken to custody and are parked in the Taluk Office, Anaimalai.

For the above grave violations, a complaint was lodged before the Anaimalai Police Station and a case was registered U/S 269, 270 of IPC in FIR No. 202/2021, Dated 08.04.2021. Therefore, it is submitted that suitable Orders may kindly be passed based on merits.

Tahsildar,
Anaimalai 21/7/21

27/7/21

Scanned by CamScanner

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr. P.C)
(கு.ந.வி.தொ. பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-1

**CBE D** 58550379

1. District: **COIMBATORE** மாவட்டம் PS: **ANAMALAI** காவல் நிலையம் Year: **2021** ஆண்டு FIR No. **202** மு.த.அ. எண் Date: **08-04-2021** நாள்

2. Act(s) சட்டம் — Sections பிரிவுகள்

| Act(s) | Sections |
|---|---|
| INDIAN PENAL CODE, 1860 | 269 |
| INDIAN PENAL CODE, 1860 | 270 |

3. (a) Occurrence of Offence Day: **THURSDAY** குற்ற நிகழ்வு நாள் — Date From: **08-04-2021** நாள் முதல் — Date To: நாள் வரை
Time Period: நேர அளவு **On** — Time from: **02.00Hrs** நேரம் முதல் — Time To: நேரம் வரை

(b) Information received at PS. Date: காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **08-04-2021** — Time: **20.40 Hrs** நேரம்

(c) General Diary Reference: Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time: நேரம்

4. Type of Information: **WRITTEN**
தகவலின் வகை

5. Place of Occurrence: (a) Direction and Distance from PS: **WEST & 10.0 Km** — Beat Number: **BEAT 3**
குற்ற நிகழ்விடம் (அ) காவல் நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — முறைக் காவல் எண்
(b) Address: **ஒடையகுளம் TO செமணாம்பதி ரோடு ரெட்டைமடை பிரிவு சாஜீஆண்டனி தோட்டம்**
முகவரி
(c) In case, outside limit of this Police Station,then the Name of P.S: — District:
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின் அந்நிலையில், அந்த கா.நி பெயர் — மாவட்டம்

6. Complainant/Informant (a) Name: **KARTHIKEYAN** — (c) Date/Year of Birth: — (d) Nationality: **INDIA**
குற்றமுறையீட்டாளர் / தகவல் தந்தவர் பெயர் — நாள் / பிறந்த ஆண்டு — நாட்டினம்
(b) Father's/Husband's Name :
தந்தை / கணவர் பெயர்
(e) Passport No.: வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் — Date of Issue: வழங்கப்பட்ட நாள் — Place of Issue: வழங்கப்பட்ட இடம்
(f) Occupation:
தொழில்
(g) Address: **VILLAGE ADMINISTRATIVE OFFICER, MARPPAGOUNDENPUDUR, PERIYAPOTHU GROUP, ANAIMALAI .**
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றம் சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்

**1)சாஜீ ஆண்டனி 2)தங்கச்சன் 3) சுரேஷ் 4) வினோத் 5)ஜானி 6) வினேஷ் 7)ரதேஷ்**

8. Reasons for delay in reporting by the complainant/Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of the properties stolen/Involved:
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம்

10. Total value of properties stolen/Involved:
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report/ Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்



Scanned by CamScanner

## 12. FIR Contents :

முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம்

சமர்பிக்கப்படுகிறது:- இன்று 08.04.2021 ம் தேதி 20.40மணிக்கு ஆனைமலை காவல் நிலைய உதவிஆய்வாளர் N. வள்ளியம்மாள் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது ஆனைமலை வட்டம் மாரப்பகவுண்டன்புதூர் கிராம நிர்வாக அலுவலர் கார்த்திகேயன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புனர் திரு. A.S. கார்த்திகேயன் கிராமநிர்வாக அலுவலர் மாரப்பகவுண்டன்புதூர் கிராமம் பெரியபோது குரூப் ஆனைமலைவட்டம் 8072106828 பெறுனர் காவல் உதவி ஆய்வாளர் ஆனைமலை காவல் நிலையம் அய்யா கோயமுத்தூர் மாவட்டம் ஆனைமலை வட்டம் பெரியபோது குரூப் மாரப்பகவுண்டன்புதூர் கிராமத்தில் ஒடையகுளம் - செமணாம்பதி சாலையில் உள்ள ரெட்டை மடை பகுதி அருகே உள்ள பூமிகளில் கேரளா மாநிலத்திலிருந்து மருத்துவம் மற்றும் இதர கழிவுகளை கொட்டுவதாக பொதுமக்கள் மற்றும் விவாசயிகள் பொள்ளாச்சி சார் ஆட்சியர் அவர்களுக்கு தெரிவித்த இரகசிய தகவலின் பேரிலும் ஆனைமலை வட்டாச்சியரின் அறிவுரையின் பேரிலும் கிராம நிர்வாக அலுவலர் ஆகிய நானும் கிராம உதவியாளர் திரு. சுப்பிரமணியம் மற்றும் மாச்சநாயக்கன்பாளையம் நில வருவாய் ஆய்வாளர் திரு. கணேசன் ஆகியோரும் மேற்படி இடத்திற்கு இன்று 08.04.2021ம் தேதி அதிகாலை 03.00 மணிக்கு விசாரணை செய்ய சென்றபோது மேற்படி பூமிகளில் சில லாரிகளுடன் சிலர் நின்று இருந்தனர். அவர்கள் எங்களை பார்த்ததும் ஓடி விட்டனர். மேற்படி பூமிகளை தணிக்கை செய்தபோது கோயமுத்தூர் மாவட்டம் ஆனைமலை வட்டம் மாச்சநாயக்கன்பாளையம் உள்வட்டம் பெரியபோது குரூப் மாரப்பகவுண்டன்புதூர் கிராமத்தில் புல எண் 779/B1, 546, 551/B, 552, 554/1, 540/Aமற்றும் 541ல் விஸ்தீரணம் முறையே பு.ஹெக் 1.54.50, 1.60.50, 4.65.50, 0.37.50, 1.70.00, 1.06.50மற்றும் 0.62 .00 ஆகிய பூமிகள் பட்டா எண்கள் 1017, 1019,1020 ன்படி திரு.சுனில் ஆண்டனி த/பெ. ஆண்டனி திரு.சாஜீ ஆண்டனி த/பெ. ஆண்டனி திரு. ஸ்டான்லிஆண்டனி த/பெ. ஆண்டனி திரு. ஜேம்ஸ் சார்ஜ் த/பெ. சார்ஜ் மேத்யு திரு.டாம் ஜார்ஜ் த/பெ. சார்ஜ் மேத்யு திருமதி. ஜமீலா த/பெ. கந்தன் குளந்தக்கறா ஆகியோருக்கு கிராம ஆவணங்களின் படி கூட்டாக பாத்தியப்பட்டது. மேற்படி பூமிகளில் தங்கச்சன், சுரேஷ் ஆகியோர்கள் பாரமரிப்பு மற்றும் மேற்பார்வை செய்து வருகிறார்கள். மேற்படி பூமிகளில் தற்போது விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.மேற்படி பூமிகளில் நின்றிருந்த லாரிகளை பார்வையிட்ட போது 1)KL 08 AZ 497 Tipper lorry 2) KL 43 C 3222 Tipper Lorry 3) KL 49 D 5807 Tipper lorry மற்றும் இரு சக்கரவாகனங்கள் TN 37 B 9568 -Hero Honda 2) TN 99 U 1650 Bajaj Pulsar 3) KL 49 C1096 Bajaj Pulsar மூன்று இருசக்கர வாகனங்கள் மற்றும் பதிவு எண் இல்லாத JCB வாகனம் இருந்தது. மேற்படி JCB வாகனம் மூலம் சுமார் 8 அடி அகலம 40 அடி நீளம் மற்றும் 10 அடி ஆழம் என அளவுகளில் ஏற்கனவே தோண்டப்பட்ட குழிகளில் கேரளா மாநிலத்திலிருந்து மருத்துவம் மற்றும் இதர கழிவுகளை கொட்டுவதை வாடிக்கையாக கொண்டுள்ளனர். என்பது விசாரணையில்



Scanned by CamScanner

தெரியவருகிறது. மேற்படி கழிவுகள் கொட்டுவது மூலம் மனித உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய தொற்றுநோய் பரவக்கூடும் என்றும் தெரிந்து சுகாதார சீர்கேடு ஏற்படும் வகையில் சுற்றுப்புற சூழலில் மக்களுக்கு சுவாசம் மூலம் கேடு விளைவித்து உடல் உபாதைகள் ஏற்படும் என்று தெரிந்தே குரோதத்துடன் மேற்படி கழிவுகளை கொட்டியுள்ளனர். மேற்படி கழிவுகளை கொட்டுவதற்கு பயன்படுத்திய வாகனங்கள் மற்றும் எதிரிகள் விட்டுச்சென்ற இருசக்கர வாகனங்களை அங்கிருந்த சாட்சிகள் 1) அருள்மோகன் த/பெ. வெங்கடாச்சலம் அரண்மனை தோட்டம் மாரப்பகவுண்டன்புதூர் 2) வீரமணி வயது-55 த/பெ. வி. காளியப்பன் ரெட்டமடை தோட்டம் மாரப்பகவுண்டன்புதூர் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் அங்கிருந்த 1) அருள்மோகன் த/பெ. வெங்கடாச்சலம் அரண்மனை தோட்டம் மாரப்பகவுண்டன்புதூர் 2) வீரமணி வயது-55 த/பெ. வி. காளியப்பன் ரெட்டமடை தோட்டம் மாரப்பகவுண்டன்புதூர் 3) அய்யப்பன் வயது-34 த/பெ. ராமசாமி ரெட்டைமடை பிரிவு மார்ப்பகவுண்டன்புதூர் 4) பிரபாகரன் த/பெ. தங்கவேல் ரெட்டைமடை பிரிவு வேல்கவுண்டச்சி தோட்டம் மாரப்பகவுண்டன்புதூர் ஆகியோர்களை விசாரிக்கப்பட்டது. எனது விசாரணையில் மேற்படி சம்பவத்திற்கு காரணமாக இருந்த கோபாலபுரத்தை சேர்ந்த ஒப்பந்தகாரர் வினோத் கேரளா மாநிலம் திருச்சூர் மாவட்டத்திலிருந்து கொட்டப்படும் கழிவுகளை மேற்படி நிலத்தின் உரிமையாளர் சாஜூஆண்டனி நிலத்தின் மேற்பார்வையாளர்கள் தங்கச்சன், சுரேஷ் ஆகியோர்களின் ஒத்துழைப்பின் பேரில் மேற்படி நிலத்தில் மூன்று டிப்பர் லாரிகளின் ஓட்டுனர்கள் கே. டி. ஜானி என். எஸ். வினேஷ் கே.வி. ரதேஷ் ஆகியோர்கள் மூலம் திருச்சூரிலிருந்து மேற்படி சம்பவ இடத்திற்கு கழிவுகளை கொண்டுவந்து கொட்டியவர்கள் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கைப்பற்றப்பட்ட வாகனங்கள் அனைத்தும் பாதுகாப்பு கருதி ஆனைமலை வட்டாச்சியர் அலுவலக வளாகத்தில் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டது. இப்படிக்கு Sd xxxx (கார்த்திகேயன் 08.04.2021) என்று கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்றுஆனைமலை காவல் நிலைய குற்ற எண் 202/2021 U/S 269,270 IPC r/w 3 of Epidemic Act ல் வழக்குபதிவு செய்யப்பட்டது. அரசால் வழங்கப்பட்ட முதல் தகவல் அறிக்கை தாள் தீர்ந்துவிட்டதால் காவல் துறை கூடுதல் இயக்குனர் மாநில குற்ற ஆவண காப்பகம் சென்னை அவர்களின் RC No- D.X. /3833 /SCRB / 2014 -8 , நாள் 03.04.2020 மற்றும் கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் C.No.E1 /71 /5169 /2020 நாள் 08.04.2020 உத்தரவின்படி இந்த முதல் தகவல் அறிக்கைக்கு CBE D 58550379 என்ற வரிசை எண் கொடுக்கப்பட்டுள்ளது. வாதியின் எழுத்தமூலபுகாருடன் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1 பொள்ளாச்சி அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை புலன் விசாரணைக்கு வேண்டி வைத்துக்கொண்டேன்.



Scanned by CamScanner

13. Action Taken: Since the above report reveals Commission of Offence(s) u/s as mentioned in item No.2, registered case and took up the investigation.
எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2 -ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

FIR read over to the Complainant/Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant/Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

14. Signature / Thumb Impression of the Complainant/Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

15. Date & Time of despatch to the court: **08-04-2021**
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name
பெயர் : **VALLIAMMAL N**

Rank
நிலை : **SUB INSPECTOR OF POLICE** No.: எண்



Scanned by CamScanner

அனுப்புநர்

பொ.வெங்கடாச்சலம்,
வருவாய் வட்டாட்சியர்,
ஆனைமலை.

பெறுநர்

1) மாவட்ட ஆட்சியர்,
கோயம்புத்தூர்.

2) சார் ஆட்சியர்,
பொள்ளாச்சி.

ந.க.எண். 193/2021/A1 நாள்: .04.2021.

அய்யா,

பொருள்: **சட்டம் மற்றும் ஒழுங்கு** - கோயம்புத்தூர் மாவட்டம்- ஆனைமலை வட்டம் - பெரியபோது குருப் - மாரப்பகவுண்டன்புதூர் கிராமம் - திரு.சாஜீ ஆண்டனி, த/பெ. ஆண்டனி வகையறாவிற்கு பாத்தியப்பட்ட விவசாய பூமிகளில் கேரள மாநிலத்திலிருந்து ஏற்றி வரப்பட்ட மருத்துவக்கழிவுகள் மற்றும் குப்பைக்கழிவுகளை கொட்டி மாசு ஏற்படுத்தியது - அறிக்கை அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை பொள்ளாச்சி சார் ஆட்சியர் அவர்களின் வாய்மொழி உத்தரவு, நாள்: 08.04.2021.

********

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், பெரியபோது குருப், மாரப்பகவுண்டன்புதூர் கிராமம், இரட்டைமடை பிரிவு அருகில் உள்ள விவசாய பட்டா பூமிகளில், இரவு நேரங்களில் கேரள மாநிலத்திலிருந்து சட்ட விரோதமாக கொண்டுவரப்பட்ட மருத்துவகழிவுகள் மற்றும் குப்பைகழிவுகளை கொட்டிவருவதாக பொள்ளாச்சி சார் ஆட்சியருக்குக் கிடைக்கப்பட்ட இரகசிய தகவலின் அடிப்படையில், பார்வையில் காணும் உத்தரவு வழங்கப்பட்டதின் பேரில், சம்பவ இடத்திற்கு சென்றபோது மூன்று லாரிகளிலிருந்து JCB இயந்திரம் மூலம் மருத்துவக்கழிவுகள் கொட்டப்பட்டது. அப்பகுதி வாழ் விவசாயிகளால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

பிரஸ்தாப புலமானது, ஆனைமலை வட்டம், பெரிய போது குருப், மாரப்பகவுண்டன் புதூர் கிரமம் 1017, 1020, 1019 ஆகிய பட்டா எண்களுக்குக் கட்டுப்பட்ட புல எண்கள் 779/B1, 546, 551/B, 552, 554/1, 540/A மற்றும் 541 ஆகிய காலைகளின் ஒட்டு மொத்த பரப்பு 13.13.50 ஹெக்டேர் புஞ்சை புலமானது, கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஜார்ஜ் மேத்யூ மகன் ஜேம்ஸ் ஜார்ஜ் மற்றும் ஆண்டனி மகன் சாஜீவ் ஆண்டனி ஆகியோருக்கு கூட்டாக

Scanned by CamScanner

பாத்தியப்பட்ட பூமிகளாகும். மேலும், அப்பகுதியில் இதன் தொடர்ச்சியாக அமைந்துள்ள சுமார் 100 ஏக்கர் புஞ்சை பூமிகளும் மேற்காணும் நபர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்டு, தென்னை மற்றும் நெல்லி சாகுபடி செய்துள்ளதும் நேரடி தணிக்கையில் தெரியவருகிறது.

மேற்படி நிகழ்வு குறித்து விசாரணை மேற்கொண்டதில், கேரள மாநிலம் திரிச்சூர் மாநகரிலிருந்து மூன்று லாரிகள் முறையே KL 43 C 3222, KL 49 D 5807 மற்றும் KL 08 AZ 0497 பதிவெண்கள் கொண்ட வாகனங்களில் மருத்துவக் கழிவுகள் மற்றும் குப்பைக்கழிவுகளை நள்ளிரவு நேரங்களில் ஏற்றி வந்துள்ளதும், மாரப்பகவுண்டன்புதூர் கிராமம் இரட்டைமடை பிரிவின் அருகில் உள்ள புல எண்கள் 538/B, 540/A, 541, 779/B, 1551/A1B, 552, 553/2, 554/1, 546, 551/B-நெ. காலை புஞ்சை பூமிகளில் JCB இயந்திரம் கொண்டு பெரிய பள்ளம் (அகழி) வெட்டி அதில் புதைத்து விடுவதும், இரு தினங்களாக நடைபெறுகிறது என்பதும் விசாரணையில் தெளிவாகிறது.

மேற்காணும் விவசாய பூமியானது வருவாய்த்துறை, காவல்துறை அலுவலர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், ஏற்கனவே அதிகளவில் அகழிகள் வெட்டி, அதில் மருத்துவக் கழிவுகள் மற்றும் இதர குப்பைக்கழிவுகள் புதைக்கப்பட்டிருப்பதும் தெரிய வருகிறது. இந்நேர்வில், இப்பட்டா புலத்தின் உரிமையாளர் கேரளா மாநிலத்தைச் சேர்ந்த திரு.சாஜீ ஆண்டனி, த/பெ.ஆண்டனி என்பதும் ஆவணங்களின் அடிப்படையில் தெரிய வருகிறது. மேலும், இதன் தொடர்ச்சியாக உள்ள சுமார் 100 ஏக்கர் பூமியும் மேற்படி நபருக்கு சொந்தமானது என்பதும், முழுவதும் கம்பி வேலி அடைக்கப்பட்டுள்ளதும் கள ஆய்வில் தெரிய வருகிறது. இவ்விவசாய பன்னை நிலங்களை கேரளா மாநிலத்தைச் சேர்ந்த மேலாளர்கள் திரு.தங்கச்சன் மற்றும் திரு.சுரேஷ் ஆகியோரின் மேற்பார்வையில் விவசாயம் செய்து வந்துள்ளதும், விசாரணையின் மூலம் அறிய நேர்கிறது.

கேரளா மாநிலம், திருச்சூரிலிருந்து KL 43 C 3222, KL 49 D 5807 மற்றும் KL 08 AZ 0497 பதிவெண்கள் கொண்ட வாகனங்களை ஓட்டுநர்கள் திரு.K.T.ஜானி (1), திரு.N.S.வினேஷ் (2), திரு.K.B.ரதேஷ் (3) ஆகியோர் மருத்துவக் கழிவுகள் மற்றும் குப்பைக்கழிவுகளை சட்ட விரோதமாக, ஆனைமலை வட்டம், பெரியபோது குரூப், மாரப்பகவுண்டன்புதூர் கிராமத்தில், ஒடையகுளம் - செம்மணாம்பதி சாலையில் உள்ள ரெட்டைமடை பகுதி அருகே திரு.சாஜீ ஆண்டனி, த/பெ. ஆண்டனி என்பவருக்கு பாத்தியப்பட்ட பூமிகளில் நள்ளிரவு நேரங்களில் அகழிகள் வெட்டி புதைத்து வந்துள்ளதும், இதற்கு உறுதுணையாக நிலத்தின் உரிமையாளர் மற்றும் பண்ணை மேலாளர்கள் செயல்பட்டுள்ளதும் தெரிய வருகிறது.

இப்பொருண்மையில், கடந்த 07.04.2021 அதிகாலை 4.00 மணியளவில் KL 43 C 3222, KL 49 D 5807 மற்றும் KL 08 AZ 0497 பதிவெண்கள் கொண்ட மூன்று லாரிகளில் மருத்துவக் கழிவுகள் மற்றும் குப்பைக்கழிவுகளை ஏற்கனவே வெட்டி வைக்கப்பட்ட அகழிகளில் கொட்ட முயன்ற பொழுது, விவசாயிகளால் தடுத்து நிறுத்தப்பட்டு, பொள்ளாச்சி சார் ஆட்சியர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சார் ஆட்சியர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், வருவாய்த்துறை மற்றும் காவல் துறையினர் சம்பவ

Scanned by CamScanner

இடத்திற்கு விரைந்து, மருத்துவக் கழிவுகள் மற்றும் குப்பைக்கழிவுகளை ஏற்றி வந்த KL 43 C 3222, KL 49 D 5807 மற்றும் KL 08 AZ 0497 பதிவெண்கள் கொண்ட மூன்று லாரிகள் மற்றும் பதிவெண் குறிப்பிடாத JCB இயந்திரம் ஆகியவையும், TN 37 P 9568, TN 99 U 1650, KL 49 C 1096 ஆகிய மூன்று இருசக்கர வாகனங்களும் விவசாயிகள் முன்னிலையில் பறிமுதல் செய்யப்பட்டு, வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இச்சட்ட விரோத செயலில் ஈடுபட்ட மேற்படி நிலத்தின் உரிமையாளர் திரு.சாஜீ ஆண்டனி, த/பெ. ஆண்டனி, பண்ணை மேலாளர்கள் திரு.தங்கச்சன் மற்றும் திரு.சுரேஷ், லாரி மற்றும் JCB உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள ஆனைமலை காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளதன் பேரில், மேற்படி நபர்களின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும், முதல் தகவல் அறிக்கையின் நகலினையும் இத்துடன் இணைத்தனுப்புகின்றேன் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இணைப்பு: கிராம ஆவணங்கள்.

தங்கள் உண்மையுள்ள,

வருவாய் வட்டாட்சியர்,
ஆனைமலை.

Scanned by CamScanner

மண்டல துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆனைமலை,
நாள்: 08.04.2021.

# மகஜர்

பணிந்தனுப்பப்படுகிறது:

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், பெரியபோது குரூப், மாரப்பகவுண்டன்புதூர் கிராமத்தில், ஒடையகுளம் - செம்மணாம்பதி சாலையில் உள்ள ரெட்டைமடை பகுதி அருகே உள்ள பூமிகளில், கேரளா மாநிலத்தில் இருந்து மருத்துவ மற்றும் இதர கழிவுகளை கொட்டுவதாக பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் தெரிவித்த தகவலின் பேரில், மேற்படி இடத்திற்கு சென்று இன்று (08.04.2021) விசாரணை செய்து, எனதறிக்கையினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கின்றேன்.

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், பெரியபோது குரூப், மாரப்பகவுண்டன்புதூர் கிராமத்தில் புல எண். 779/B1, 546, 551/B, 552, 554/1, 540/A மற்றும் 541-இல் விஸ்தீரணம் முறையே பு.ஹெக். 1.54.50, 1.60.50, 4.65.50, 0.37.50, 1.70.00, 1.06.50 மற்றும் 0.62.00 ஆகிய பூமிகள் பட்டா எண்கள். 1017, 1019, 1020-இன் படி, திரு.சாஜீ ஆண்டனி, த/பெ.ஆண்டனி, திரு.சுனில் ஆண்டனி, த/பெ. ஆண்டனி, திரு.ஸ்டான்லி ஆண்டனி, த/பெ.ஆண்டனி, திரு.ஜேம்ஸ் ஜார்ஜ், த/பெ.ஜார்ஜ் மேத்யூ, திரு.டாம் ஜார்ஜ், த/பெ.ஜார்ஜ் மேத்யூ, திருமதி.ஜமீலா, த/பெ.கந்தன் குளந்தகரா ஆகியோருக்கு கிராம ஆவணங்களின் படி கூட்டாக பாத்தியப்பட்டது. மேற்படி பூமிகளை திரு.தங்கச்சன் (1), திரு.சுரேஷ் (2) ஆகியோர் பராமரிப்பு மற்றும் மேற்பார்வை செய்து வருகின்றனர். மேற்படி பூமிகளில் தற்பொழுது விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பூமிகளில் KL 43 C 3222, KL 49 D 5807 மற்றும் KL 08 AZ 0497 கொண்ட மூன்று பெரிய டிப்பர் லாரிகளில் கேரளா மாநிலத்தில் இருந்து மருத்துவ மற்றும் இதர கழிவுகளை ஏற்றி வந்து, பதிவெண் ஏதும் இல்லாத ஒரு JCB வாகனம் மூலம் சுமார் 8 அடி அகலம், 40 அடி நீளம் மற்றும் 10 அடி ஆழம் என அளவுகளில் ஏற்கனவே தோண்டப்பட்ட குழிகளில் கொண்டிக் கொண்டிருந்தனர். மேற்படி பூமிகளில், கேரளா மாநிலத்தில் இருந்து மருத்துவ மற்றும் இதர கழிவுகளை கொட்டுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளது விசாரணையில் தெரிய வருகிறது.

மேற்படி மூன்று டிப்பர் லாரிகள், பதிவெண் இல்லாத ஒரு JCB வாகனம், மற்றும் TN 37 P 9568, TN 99 U 1650, KL 49 C 1096 ஆகிய மூன்று இருசக்கர வாகனம் ஆகிவை கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்படி நிகழ்வுக்கு காரணமாக இருந்த நிலத்தின் உரிமையாளர் திரு.சாஜ ஆண்டனி என்பவர் மீதும், நிலத்தின் மேற்பார்வையாளர்கள் திரு.தங்கச்சன், திரு.சுரேஷ் ஆகியோர் மீதும், கோபாலபுரத்தைச் சேர்ந்த ஒப்பந்தகாரர் திரு.வினோத் என்பவர் மீதும், திருச்சூரைச் சேர்ந்த மேற்படி மூன்று டிப்பர் வாரிகளின் ஓட்டுநர்கள் திரு.K.T.ஜானி (1), திரு.N.S.வினேஷ் (2), திரு.K.B.ரதேஷ் (3) ஆகியோர் மீதும் குற்றவியல் நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்கின்றேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இணைப்பு: கிராம ஆவணங்கள்.

O/C
[signature] 08/04/2021
மண்டல துணை வட்டாட்சியர்,
ஆனைமலை.

சாட்சிகள்:

1) [signature] (திரு.A.S.கார்த்திகேயன், கிராம நிர்வாக அலுவலர், மாரப்பகவுண்டன்புதூர்)
2) [signature] (திரு.R.கணேசன், வருவாய் ஆய்வாளர், மார்ச்சநாயக்கன்பாளையம்)

பெறுநர்:

வருவாய் வட்டாட்சியர்,
ஆனைமலை.

Scanned by CamScanner

அனுப்புநர்:

திரு.A.S.கார்த்திகேயன்,
கிராம நிர்வாக அலுவலர்,
மாரப்பகவுண்டன்புதூர் கிராமம்,
பெரியபோது குருப், ஆனைமலை வட்டம்.

பெறுநர்:

காவல் ஆய்வாளர்,
ஆனைமலை காவல் நிலையம்,
ஆனைமலை.

அய்யா,

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், பெரியபோது குருப், மாரப்பகவுண்டன்புதூர் கிராமத்தில், ஒடையகுளம் - செம்மணாம்பதி சாலையில் உள்ள ரெட்டைமடை பகுதி அருகே உள்ள பூமிகளில், கேரளா மாநிலத்தில் இருந்து மருத்துவ மற்றும் இதர கழிவுக்களை கொட்டுவதாக பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பொள்ளாச்சி சார் ஆட்சியர் அவர்களுக்கு தெரிவித்த இரகசிய தகவலின் பேரிலும், ஆனைமலை வட்டாட்சியர் அவர்களின் அறிவுரையின் பேரிலும், கிராம நிர்வாக அலுவலராகிய நானும், கிராம உதவியாளர் திரு.சுப்பிரமணியன் மற்றும் மார்ச்சநாயக்கன்பாளையம் நில வருவாய் ஆய்வாளர் திரு.கணேசன் ஆகியோரும் மேற்படி இடத்திற்கு சென்று இன்று (08.04.2021) விசாரணை செய்த போது, கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், பெரியபோது குருப், மாரப்பகவுண்டன்புதூர் கிராமத்தில் புல எண். 779/B1, 546, 551/B, 552, 554/1, 540/A மற்றும் 541-இல் விஸ்தீரணம் முறையே பு.ஹெக். 1.54.50, 1.60.50, 4.65.50, 0.37.50, 1.70.00, 1.06.50 மற்றும் 0.62.00 ஆகிய பூமிகள் பட்டா எண்கள். 1017, 1019, 1020-இன் படி, திரு.சுனில் ஆண்டனி, த/பெ. ஆண்டனி, திரு.சாஜீ ஆண்டனி, த/பெ. ஆண்டனி, திரு.ஸ்டான்லி ஆண்டனி, த/பெ.ஆண்டனி, திரு.ஜேம்ஸ் ஜார்ஜ், த/பெ.ஜார்ஜ் மேத்யூ, திரு.டாம் ஜார்ஜ், த/பெ.ஜார்ஜ் மேத்யூ, திருமதி.ஜமீலா, த/பெ.கந்தன் குளந்தகரா ஆகியோருக்கு கிராம ஆவணங்களின் படி கூட்டாக பாத்தியப்பட்டது. மேற்படி பூமிகளை திரு.தங்கச்சன் (1), திரு.சுரேஷ் (2) ஆகியோர் பராமரிப்பு மற்றும் மேற்பார்வை செய்து வருகின்றனர். மேற்படி பூமிகளில் தற்பொழுது விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி பூமிகளில் நின்று கொண்டிருந்த லாரிகளை பார்வையிட்ட பொழுது, (1) KL 43 C 3222, (2) KL 49 D 5807 மற்றும் (3) KL 08 AZ 0497 கொண்ட மூன்று பெரிய டிப்பர் லாரிகள், TN 37 P 9568, TN 99 U 1650, KL 49 C 1096 ஆகிய மூன்று இருசக்கர வாகனங்கள் மற்றும் பதிவெண் ஏதும் இல்லாத ஒரு JCB வாகனம் இருந்தது. மேற்படி JCB வாகனம் மூலம் சுமார் 8 அடி அகலம், 40 அடி நீளம் மற்றும் 10 அடி ஆழம் என அளவுகளில் ஏற்கனவே தோண்டப்பட்ட குழிகளில் கேரளா மாநிலத்தில் இருந்து மருத்துவ மற்றும் இதர கழிவுகளை கொடடுவதை வாடிக்கையாகக் கொணடுள்ளனர் என்பதும் விசாரணையில் தெரிய வருகிறது.

Scanned by CamScanner

மேற்படி கழிவுகளை கொட்டுவதன் மூலம் மனித உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய தொற்றுநோய் பரவக்கூடும் எனத் தெரிந்தும், சுகாதார சீர்கேடு ஏற்படும் வகையில் சுற்றுப்புற சூழலில் மக்களுக்கு சுவாசம் மூலம் கேடு விளைவித்து, உடல் உபாதைகள் ஏற்படும் என்று தெரிந்தே குரோதத்துடன் மேற்படி கழிவுகளை கொட்டியுள்ளனர்.

மேற்படி மூன்று டிப்பர் லாரிகள், பதிவெண் இல்லாத ஒரு JCB வாகனம், மற்றும் TN 37 P 9568, TN 99 U 1650, KL 49 C 1096 ஆகிய மூன்று இருசக்கர வாகனம் ஆகியவை கைப்பற்றப்பட்டு பாதுகாப்புக் கருதி, ஆனைமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வுக்கு காரணமாக இருந்த நிலத்தின் உரிமையாளர் திரு.சாஜீ ஆண்டனி என்பவர் மீதும், நிலத்தின் மேற்பார்வையாளாகள் திரு.தங்கச்சன், திரு.சுரேஷ் ஆகியோர் மீதும், கோவிந்தாபுரத்தைச் சேர்ந்த ஒப்பந்தகாரர் திரு.வினோத் என்பவர் மீதும், திருச்சூரைச் சேர்ந்த மேற்படி மூன்று டிப்பர் வாரிகளின் ஓட்டுநர்கள் திரு.K.T.ஜானி(1), திரு.N.S.வினேஷ்(2), திரு.K.B.ரதேஷ் (3) ஆகியோர் மீதும் வழக்கு பதிவு செய்து, குற்றவியல் நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு: தொடர்புடைய ஆவணங்கள்.

தங்கள் உண்மையுள்ள,

கி.நி. 08/04/2021

கிராம நிர்வாக அலுவலர்,
மாரப்பகவுண்டன்புதூர் கிராமம்.

Scanned by CamScanner

கிராம நிர்வாக அலுவலகம்,
மாரப்பகவுண்டன்புதூர்,
நாள்: 08.04.2021.

பணிந்தனுப்பப்படுகிறது:

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், பெரியபோது குரூப், மாரப்பகவுண்டன்புதூர் கிராமத்தில், ஒடையகுளம் - செம்மணாம்பதி சாலையில் உள்ள ரெட்டைமடை பகுதி அருகே உள்ள பூமிகளில், கேரளா மாநிலத்தில் இருந்து மருத்துவ மற்றும் இதர கழிவுகளை கொட்டுவதாக பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் தெரிவித்த தகவலின் பேரில், மேற்படி இடத்திற்கு சென்று இன்று (08.04.2021) விசாரணை செய்து, எனதறிக்கையினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கின்றேன்.

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், பெரியபோது குரூப், மாரப்பகவுண்டன்புதூர் கிராமத்தில் புல எண். 779/B1, 546, 551/B, 552, 554/1, 540/A மற்றும் 541-இல் விஸ்தீரணம் முறையே பு.ஹெக். 1.54.50, 1.60.50, 4.65.50, 0.37.00, 1.70.00, 1.06.50 மற்றும் 0.62.00 ஆகிய பூமிகள் பட்டா எண்கள். 1017, 1019, 1020-இன் படி, திரு.சுனில் ஆண்டனி, த/பெ. ஆண்டனி, திரு.சாஜீ ஆண்டனி, த/பெ.ஆண்டனி, திரு.ஸ்டான்லி ஆண்டனி, த/பெ.ஆண்டனி, திரு.ஜேம்ஸ் ஜார்ஜ், த/பெ.ஜார்ஜ் மேத்யூ, திரு.டாம் ஜார்ஜ், த/பெ.ஜார்ஜ் மேத்யூ, திருமதி.ஜமீலா, த/பெ.கந்தன் குளந்தகரா ஆகியோருக்கு கிராம ஆவணங்களின் படி கூட்டாக பாத்தியப்பட்டது. மேற்படி பூமிகளை திரு.தங்கச்சன் (1), திரு.சுரேஷ் (2) ஆகியோர் பராமரிப்பு மற்றும் மேற்பார்வை செய்து வருகின்றனர். மேற்படி பூமிகளில் தற்பொழுது விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி பூமிகளில் KL 43 C 3222, KL 49 D 5807 மற்றும் KL 08 AZ 0497 கொண்ட மூன்று பெரிய டிப்பர் லாரிகளில், கேரளா மாநிலத்தில் இருந்து மருத்துவ மற்றும் இதர கழிவுகளை ஏற்றி வந்து, பதிவெண் ஏதும் இல்லாத ஒரு JCB வாகனம் மூலம் சுமார் 8 அடி அகலம், 40 அடி நீளம் மற்றும் 10 அடி ஆழம் என அளவுகளில் ஏற்கனவே தோண்டப்பட்ட குழிகளில் கொண்டிக் கொண்டிருந்தனர். மேற்படி பூமிகளில், கேரளா மாநிலத்தில் இருந்து மருத்துவ மற்றும் இதர கழிவுகளை கொட்டுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளது விசாரணையில் தெரிய வருகிறது.

மேற்படி மூன்று டிப்பர் லாரிகள், பதிவெண் இல்லாத ஒரு JCB வாகனம், மற்றும் TN 37 P 9568, TN 99 U 1650, KL 49 C 1096 ஆகிய மூன்று இருசக்கர வாகனம் ஆகிவை கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்படி நிகழ்வுக்கு காரணமாக இருந்த நிலத்தின் உரிமையாளர் திரு.சாஜ ஆண்டனி என்பவர் மீதும், நிலத்தின் மேற்பார்வையாளாகள் திரு.தங்கச்சன், திரு.சுரேஷ் ஆகியோர் மீதும், கோபாலபுரத்தைச் சேர்ந்த ஒப்பந்தகாரர் திரு.வினோத் என்பவர் மீதும், திருச்சூரைச் சேர்ந்த மேற்படி மூன்று டிப்பர் வாரிகளின் ஓட்டுநர்கள் திரு.K.T.ஜானி (1), திரு.N.S.வினேஷ் (2), திரு.K.B.ரதேஷ் (3) ஆகியோர் மீதும் குற்றவியல் நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு: தொடர்புடைய ஆவணங்கள்.

ஒ/- 08/04/2021
கிராம நிர்வாக அலுவலர்,
மாரபபகவுண்டன்புதூர் கிராமம்.

பெறுநர்:

வட்டாட்சியர்,
ஆனைமலை.

Scanned by CamScanner

நில வருவாய் ஆய்வாளர் அலுவலகம்,
மார்ச்சநாயக்கன்பாளையம்,
நாள்: 08.04.2021.

பணிந்தனுப்பப்படுகிறது:

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், பெரியபோது குரூப், மாரப்பகவுண்டன்புதூர் கிராமத்தில், ஒடையகுளம் - செம்மணாம்பதி சாலையில் உள்ள ரெட்டைமடை பகுதி அருகே உள்ள பூமிகளில், கேரளா மாநிலத்தில் இருந்து மருத்துவ மற்றும் இதர கழிவுகளை கொட்டுவதாக பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பொள்ளாச்சி சார் ஆட்சியர் அவர்களுக்கு தெரிவித்த இரகசிய தகவலின் பேரிலும், ஆனைமலை வட்டாட்சியர் அவர்களின் அறிவுரையின் பேரிலும், மேற்படி இடத்திற்கு சென்று இன்று (08.04.2021) விசாரணை செய்து, எனதறிக்கையினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கின்றேன்.

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், பெரியபோது குரூப், மாரப்பகவுண்டன்புதூர் கிராமத்தில் புல எண். 779/B1, 546, 551/B, 552, 554/1, 540/A மற்றும் 541-இல் விஸ்தீரணம் முறையே பு.ஹெக். 1.54.50, 1.60.50, 4.65.50, 0.37.50, 1.70.00, 1.06.50 மற்றும் 0.62.00 ஆகிய பூமிகள் பட்டா எண்கள். 1017, 1019, 1020-இன் படி, திரு.சுனில் ஆண்டனி, த/பெ. ஆண்டனி, திரு.சாஜ ஆண்டனி, த/பெ.ஆண்டனி, திரு.ஸ்டான்லி ஆண்டனி, த/பெ.ஆண்டனி, திரு.ஜேம்ஸ் ஜார்ஜ், த/பெ.ஜார்ஜ் மேத்யூ, திரு.டாம் ஜார்ஜ், த/பெ.ஜார்ஜ் மேத்யூ, திருமதி.ஜமீலா, த/பெ.கந்தன் குளந்தகரா ஆகியோருக்கு கிராம ஆவணங்களின் படி கூட்டாக பாத்தியப்பட்டது. மேற்படி பூமிகளை திரு.தங்கச்சன் (1), திரு.சுரேஷ் (2) ஆகியோர் பராமரிப்பு மற்றும் மேற்பார்வை செய்து வருகின்றனர். மேற்படி பூமிகளில் தற்பொழுது விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி பூமிகளில் KL 43 C 3222, KL 49 D 5807 மற்றும் KL 08 AZ 0497 கொண்ட மூன்று பெரிய டிப்பர் லாரிகளில் கேரளா மாநிலத்தில் இருந்து மருத்துவ மற்றும் இதர கழிவுகளை ஏற்றி வந்து, பதிவெண் ஏதும் இல்லாத ஒரு JCB வாகனம் மூலம் சுமார் 8 அடி அகலம், 40 அடி நீளம் மற்றும் 10 அடி ஆழம் என அளவுகளில் ஏற்கனவே தோண்டப்பட்ட குழிகளில் கொண்டிக் கொண்டிருந்தனர். மேற்படி பூமிகளில், கேரளா மாநிலத்தில் இருந்து மருத்துவ மற்றும் இதர கழிவுகளை கொட்டுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளது விசாரணையில் தெரிய வருகிறது.

மேற்படி மூன்று டிப்பர் லாரிகள், பதிவெண் இல்லாத ஒரு JCB வாகனம், மற்றும் TN 37 P 9568, TN 99 U 1650, KL 49 C 1096 ஆகிய மூன்று இருசக்கர வாகனம் ஆகிவை கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்படி நிகழ்வுக்கு காரணமாக இருந்த நிலத்தின் உரிமையாளர் திரு.சாஜ ஆண்டனி என்பவர் மீதும், நிலத்தின் மேற்பார்வையாளாகள் திரு.தங்கச்சன், திரு.சுரேஷ் ஆகியோர் மீதும், கோபாலபுரத்தைச் சேர்ந்த ஒப்பந்தகாரர் திரு.வினோத் என்பவர் மீதும், திருச்சூரைச் சேர்ந்த மேற்படி மூன்று டிப்பர் வாரிகளின் ஓட்டுநர்கள் திரு.K.T.ஜானி (1), திரு.N.S.வினேஷ் (2), திரு.K.B.ரதேஷ் (3) ஆகியோர் மீதும் குற்றவியல் நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு: தொடர்புடைய ஆவணங்கள்.

8/4/2021

நில வருவாய் ஆய்வாளர்,
மார்ச்சநாயக்கன்பாளையம்.

பெறுநர்:

வட்டாட்சியர்,
ஆனைமலை.

Scanned by CamScanner